திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, சிலோன், பர்மா தமிழர்களுக்கு வால்பாறையில் 1,000 ஏக்கர்களில் தேயிலை அல்லது காப்பித் தோட்டம் அமைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனிக் கேள்வி போடவும்.

உவரியில் மீன் பதனிடும் தொழிற்சாலை

*561 **வினா—திரு. வீ. கார்த்திசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், உவரியில் கிடைக்கும் மீன்களைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு மீன் பதனிடும் சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை.

போந்தவாக்கம்-மாதர்பாக்கம் சாலை.

*562 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் முதல் மாதர்பாக்கம் வரையுள்ள பேருந்துகள் செல்லும் சாலையைப் பெருவழித் துறையில் எடுத்து தார்ச்சாலை போடும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சாலையைப் பெருவழித் துறைக்கு மாற்ற 1973-74 ஆம் ஆண்டுதான் மாவட்ட வளர்ச்சி மன்றம் குறைந்த முதன்மையுடன் பரிந்துரை செய்தது. அதனால் இதுவரை இச் சாலையை பெருவழித் துறைக்கு மாற்ற முடியவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஆந்திர எல்லையில் இருக்கும் இந்த ஊராட்சி ஒன்றியச் சாலையில் நீண்டநாட்களாகப்

1974 மார்ச் 22]

பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. அது மிகவும் கலனாக இருக்கிறது. எனவே, தயவு கூர்ந்து வருகிற ஆண்டிலேயாவது அதற்கு முன்னுரிமை அளித்து பெருவழித் துறையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிதி வசதிக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்

உத்திராசாக்குட்டையில் ஏரி அமைப்பு

*** 563 வின.—திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, சின்ன வடகம்பட்டி, கனவாய்ப்புதூர், உத்திராசாக்குட்டையில் ஏரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. செல்லதுரை : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதியில் அந்த ஏரியைக் கட்டினல் கிட்டத்தட்ட 500 ஏக்கர் களுக்கு மேல் பாய்வதற்கு வசதியிருக்கிறது. அந்தப் பகுதி வறட்சியான பகுதி. ஆகவே, இனியாவது மறுபரிசீலனை செய்து அந்த ஏரியைக் கட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 500 ஏக்கர்கள் அல்ல, இந்த சின்னவடகம்பட்டி, உத்திராசாக் குட்டையில், அந்தக் குட்டையினல் பலன் அடையக்கூடிய ஏக்க ராக்கள் சுமார் 46.50 ஆகும். அது சிக்கனமான திட்டமாக இல்லாததால் கைவிடப்பட்டது. மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டுமென்று வேறு மாற்று யோசனைகள் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மேல் பொறி யாளர் அதைப்பற்றி ஆராய்ந்து வருகிருர்.